**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**முன்னிலை – திரு. இரா. இளஞ்செழியன், பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**
**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20–ம் நாள் திங்கட்கிழமை**
**சுருக்கு வழக்கு எண். 29/2025**
**(CNR.NO.TNSA21-000442-2025)**

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | – | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ஏற்காடு காவல் நிலையம்,<br>**கு.எண். 37/2025** |
| எதிரி | – | விஜய் த/பெ தியாகராஜன் (28)<br>கந்தசாமி பிள்ளை வீதி, செவ்வாய்பேட்டை,<br>சேலம் மாவட்டம். |
| குற்றம் | – | U/s. 281, 106 BNS. |
| தீர்வு | – | **U/s. 271(1) BNSS Act.** |

இவ்வழக்கானது கடந்த 05.12.2025–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை (1) அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.சங்கரபாண்டியன், அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

# <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் படி தாக்கல் செய்ததன் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

| வ. எண். | விளக்கம் | விபரங்கள் | | |
|---|---|---|---|---|
| 1 | சம்பவம் நடந்த நாள் | 09.02.2025 | | |
| 2 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 11.02.2025 | | |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | |
| | | 14.02.2025 | 14.02.2025 (Station Bail) | |
| 4 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 26.11.2025 | | |
| 5 | கு.வி.மு.ச. பிரிவு.281–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 02.02.2026 | | |
| 6 | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | –– | | |
| 7 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 05.03.2026 | 05.03.2026 |
| | | அ.சா.2 | 05.03.2026 | 05.03.2026 |
| | | அ.சா.3 | 05.03.2026 | 05.03.2026 |
| | | அ.சா.4 | 24.03.2026 | 24.03.2026 |
| 8 | எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | 02.04.2026 | | |
| 9 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | –– | –– | |
| 10 | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 20.04.2026 | | |
| 11 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 20.04.2026 | | |

**Judicial Form No:61**

**Complainant** : Sub-Inspector of Police, Yercaud Police station

**Accused** : Vijay S/o. Thiyagarajan

**Offence** : **U/s. 281, 106 BNS.**

**Finding** : **Accused found not guilty.**

**Sentence** : **271(1) BNSS Act**

**Property** : **C.P. No. Nil**

| S.No | Name | Father's/Husband Name | Caste or race | Occupation | Residence | Age |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | விஜய் | தியாகராஜன் | -- | -- | கந்தசாமி பிள்ளை வீதி, செவ்வாய்பேட்டை, சேலம் மாவட்டம். | 28 |

| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commence ment of trial | Close of Trial | Sentence or order | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 09.02.2025 | 11.02.2025 | 14.02.2025 | 14.02.2025 Station Bail | 02.02.2026 | 02.04.2026 | 20.04.2026 | Nil |

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்-**

கடந்த 09.02.2025-ம் தேதியன்று 20.00 மணிக்கு ஏற்காடு To சேலம் செல்லும் மலைப்பாதை ரோட்டில் 17-வது கொண்டை ஊசி வளைவு அருகே எதிரி விஜய் என்பவர் TN 30 BK 5097 என்ற HONDA DIO வண்டியை ஓட்டிக்கொண்டும், பின்னால் புகார்தாரரின் அம்மா ரேவதியை உட்கார வைத்துக்கொண்டும் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்

ஓட்டிவந்து திடீரென பிரேக் போட்டு விபத்து ஏற்படுத்தியும், மேற்படி விபத்தினால் வண்டியின் பின்னால் உட்கார்ந்து வந்த புகார்தாரரின் அம்மா ரேவதி கீழே விழுந்து தலையில் பலத்த அடிபட்டு இறப்பை உண்டாக்கிய குற்றத்திற்காக எதிரியாகிய உம்மீது சட்டப்பிரிவு 281, 106 BNS-ன் ஏற்காடு சிறப்பு காவல் உதவியாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்-</u>

**அ.சா.1 தமிழரசன்** தனது சாட்சியத்தில் கடந்த கடந்த 09.02.2025-ம் ஆண்டு தனது அம்மா வேலை செய்து வந்த வீட்டின் உரிமையாளரிடமிருந்து இரவு 10.30 மணிக்கு தனக்கு போன் செய்து தனது அம்மாவும், விஜய் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ஏற்காட்டை சுற்றி பார்த்துவிட்டு இரவு திரும்ப சேலம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது 17-வது கொண்டை ஊசி வளைவு அருகே வந்தபோது திடிரென பிரேக் போட்டதில் தனது அம்மாவிற்கு தலையில் அடிப்பட்டதாகவும், ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றதாக கேள்விபட்டேன் என்றும்,

தான் சம்பவத்தை கேள்வி பட்டு சேலம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றும், பின்பு தனது அம்மா சிகிச்சை பலனளிக்காமல் 11.02.2025–ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், இந்த சம்பவம் தொடர்பாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அந்த புகார் மனுவிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5). **அ.சா.2 ஜோதிகா** தனது சாட்சியத்தில் கடந்த கடந்த 09.02.2025–ம் தேதி காலை 06.00 மணியளவில் தனது மாமியார் வீட்டு வேலைக்கு செல்வதாக சென்றவர் இரவு வரை வரவில்லை என்றும், தனது மாமியார் வேலை செய்யும் வீட்டின் உரிமையாளர் மீனா என்பவருக்கு விஜய் என்பவர் போன் செய்து தானும் ரேவதியும் இருசக்கர வாகனத்தில் ஏற்காட்டை சுற்றி பார்த்துவிட்டு இரவு 08.00 மணியளவில் 17–வது கொண்டை ஊசி வளைவு அருகே வந்தபோது விபத்து ஏற்பட்டதாக கூறினார் என்றும், இந்த சம்பவம் தொடர்பாக தனது கணவர் அ.சா.1 புகார் கொடுத்தார்என்றும், தனது மாமியார் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6). **அ.சா.3 விஜயகுமார்** தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2025–ம் தேதி காலை 10.30 மணியளவில் ஏற்காடு போலீசார் சம்பவ இடத்தை

பார்வையிட்டு கொண்டிருந்தபோது தானும் தனது மாமன் மகன் கண்ணன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஏற்காடு போலீசார் வரைபடம் வரைந்துகொண்டிருந்தனர் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7). **அ.சா.4 பாலாஜி ரமணன்** தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2025–ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சம்பத் என்பவர் நிலைய அலுவலலில் இருந்தபோது புகார்தாரர் தமிழரசன் த/பெ. சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரிலும், ஏற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும் ஏற்காடு காவல் நிலைய குற்ற எண்.37/2025, ச/பி. 281, 106 BNS Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், பின்னர் மல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராகவும், பொறுப்பு ஏற்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளராகவும் இருந்தபோது தனக்கு வழக்கு குறித்து தகவல் கிடைத்த பின் தான் உடனடியாக சம்பவம் இடம் சென்று காலை 10.30 மணிக்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆசியவற்றை சாட்சிகள் விஜயகுமார், கண்ணன் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்றும், பின்னர் சாட்சிகள் மீனா, ஜோதிகா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு பிரேத விசாரணை 11.02.2025–ம் தேதியன்று

12.00 மணி முதல் 14.00 மணி வரை சேலம் அரசு மருத்துவமனை சவகிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் முடிக்கப்பட்டது என்றும், பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 521 திரு.கௌரி சங்கர் வசம் அனுப்பபப்பட்டது என்றும், பின்னர் வழக்கின் எதிரியான விஜய் த/பெ. தியாகராஜன் என்பவரை 14.02.2025-ம் தேதி சுமார் 15.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டது என்றும், பின்பு 14.02.2025-ம் தேதி வழக்கின் எதிரியின் வாகனமாக HONDA DIO TN 30 BK 5097 என்ற பதிவெண்ட கொண்ட வாகனத்தினை வாகன ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், சேலம் கிழக்கு அவர்களிடம் அனுப்பப்பட்டு வாகன ஆய்வு சான்று பெறப்பட்டது என்றும், பின்னர் 06.03.2025-ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.கோகுல் ராம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் மேற்படி மருத்துவரிடமிருந்து பிரேத பரிசோதனை சான்றிதழ் பெறப்பட்டது என்றும், தலைமை காவலர் திரு.கௌரி சங்கர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சம்பத் அவர்களை விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

13). இந்நிலையில் எதிரிக்கு பாதகமான அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து Sec.351(1) BNSS Act–ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

14). எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**15) தீர்வு:–**

வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன ரேவதி தனது தாயார் என்றும், கடந்த 09.02.2025–ம் தேதியன்று தனது அம்மா வேலை செய்து வந்த வீட்டின் உரிமையாளரிடமிருந்து இரவு 10.30 மணிக்கு தனது அம்மாவும், விஜய் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ஏற்காட்டை சுற்றி பார்த்துவிட்டு இரவு திரும்ப சேலம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது 17–வது கொண்டை ஊசி வளைவு அருகே திடிரென பிரேக் போட்டதில் தனது அம்மாவின் தலையில் அடிப்பட்டதாகவும், ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு, மேல் சிகிச்சைக்கு சேலம் அரசு

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், போன் வந்ததாகவும் சம்பவத்தை கேள்வி பட்டு சென்று பார்த்ததாகவும், 11.02.2025–ம் தேதியன்று சிகிச்சை பலனளிக்காமல் தனது அம்மா இறந்துவிட்டதாகவும், சம்பவம் தொடர்பாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16). புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் புகாரில் சொல்லிய சங்கதிகளை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளித்துள்ளார். தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும், பட்டியல் சாட்சி 2–7 வரையுள்ளவர்கள் தனது உறவினர்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17). அ.சா.1–ன் சாட்சியத்தினை ஆராய்கையில் வழக்கு சம்பவத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்பதும், அவரது அம்மா வேலை செய்த வீட்டின் உரிமையாளர் தகவல் சொன்னதன் பேரிலேயே வழக்கு சம்பவம் குறித்து தெரிந்திருக்கின்றது என்பதும் அறிய முடிகிறது. எதிரியின் ஆஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் வழக்கு சம்பவம் ஏற்பட்டது என்பது குறித்தும், அ.சா.1–ன் சாட்சியமானது அமையவில்லை

எனவே அ.சா.1–ன் சாட்சியத்தினை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18). அ.சா.2 தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோனவர் தனது மாமியார் என்றும், 09.02.2025–ம் தேதியன்று காலை 06.00 மணியளவில் வீட்டு வேலைக்கு செல்வதாக சென்றவர் இரவு வரை வரவில்லை என்றும், தனது மாமியார் வேலை செய்யும் வீட்டின் உரிமையாளர் மீனா என்பவருக்கு விஜய் என்பவர் போன் செய்து தானும் ரேவதியும் இருசக்கர வாகனத்தில் ஏற்காட்டை சுற்றி பார்த்துவிட்டு இரவு 08.00 மணியளவில் 17–வது கொண்டை ஊசி வளைவு அருகே வந்தபோது விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றும், விபத்து சம்மந்தமாக தனது கணவர் அ.சா.1 புகார் கொடுத்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19). அ.சா.2–ன் சாட்சியத்தினை ஆராய்கையில் வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றும், கேள்விபட்டதன் அடிப்படையிலேயே தெரியவந்திருக்கிறது என்பதும் அறியமுடிகியறது.

20). வழக்கு சம்பவம் குறித்தும், வழக்கு சம்பவமானது எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பது குறித்தும் அ.சா.2–ன் சாட்சியம் அமையவில்லை என்று கருதி அ.சா.2–ன் சாட்சியத்தினை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என இந்நீதிமன்றம்

கருதுகின்றது.

21). பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2025–ம் தேதி காலை 10.30 மணியளவில் ஏற்காடு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு கொண்டிருந்தபோது நானும் எனது மாமன் மகன் கண்ணன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது போலீசார் வரைபடம் வரைந்துகொண்டிருந்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அக்கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

22). எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் எந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் கையெழுத்து பெற்றனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது என்றும், மகஜரிலுள்ள விவரம் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3–ன் சாட்சியத்தினை ஆராய்கையில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று முறையாக புலன் விசாரணை செய்தனரா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் ஏற்படும் விதமாகவே உள்ளது. அ.சா.3–ன் சாட்சியமானது நம்பகதன்மையாக இல்லாததால் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

23). புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 தனது சாட்சியத்தில் ஏற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், பின்னர் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது குறித்தும், பின்னர் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தது குறித்தும், வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட வழக்கு சொத்தினை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி சான்றிதழ் பெற்றது குறித்தும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

24). எதிரி தரப்பு குறுக்கு விசாரணையிலும் வழக்கு சம்பவம் குறித்தும், புலன் விசாரணை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் புகாரினை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதற்கான கேள்விக்கும், உரிய பதில் அளித்துள்ளார். வழக்கு சம்பவம் குறித்தும், புலன் விசாரணை குறித்தும் அ.சா.4 சாட்சியமானது ஏற்றுக்கொள்ளதக்கதாகவே உள்ளது.

25). முடிவாக, உறுதியூட்டப்படாத அ.சா.4–ன் சாட்சியத்தினை கொண்டு மட்டும், வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டார் என்றும், எதிரியின்

அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினாலும், வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றும், முடிவு செய்திட இயலாது.

26). வழக்கு சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டாரா என்பது குறித்தும அரசு தரப்பு சாட்சியங்களான அ.சா.1 முதல் அ.சா.3 வரையுள்ள சாட்சியங்களில் இந்நீதிமன்றத்திற்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/–.இரா. இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

**அ.சா.1** – திரு. தமிழரசன்

**அ.சா.2** – திரு. ஜோதிகா

**அ.சா.3** – திரு. விஜயகுமார்

**அ.சா.4** – திரு. பாலாஜி ரமணன்

**Judicial Form No:68**

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் | 05.03.2026 | அ.சா.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரிலுள்ள 1–வது கையெழுத்து | 05.03.2026 | அ.சா.3 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 4. | விபத்து பதிவேடு | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | பார்வை மகஜர் | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 6. | மாதிரி வரைபடம் | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 7. | பிரேத விசாரணை அறிக்கை | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 8. | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |
| 9. | பிரேத பரிசோதனை சான்றிதழ் | 24.03.2026 | அ.சா.4 | அரசு தரப்பு | அசல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** **...இல்லை**

**சான்றுபொருட்கள்.** **...இல்லை**

**ஓம்/–.இரா. இளஞ்செழியன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

குறிப்பு–

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.